உப்புப்பேட்டை தோல் பதனிடும் சாலையிலிருந்து வெளி யேற்றப்படும் கழிவு நீர்.

*வினா எண் 469—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஆற்காடு ஒன்றியத்திலுள்ள உப்புப்பேட்டை Tannery யிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் சாத்தூர், கலர், தாசிபுரம் கிராமங்களுக்குட்பட்ட ஆயிரக்கணக்கான நஞ்சை நிலங்கள் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் கழிவு நீரை அப்புறப்படுத்த வழி வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 23—4—1981 நாளிட்ட அரசாணை எண். 726-ன் படி இம்மாநிலத்திலுள்ள அனைத்து தோல் பதனிடும் தொழிற் சாலைகளும் கழிவு நீரை ரசாயன முறையில் சுத்தப்படுத்த தக்க ஏற்பாடுகளை 3—12—1981-ல் செய்து முடிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. தொழிற்சாலை அதிபர்கள் மேற் கொண்டு அவகாசம் கோரியதால், 30—6—1982 வரை அவ காசம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்குள் அவ்வாறு செய்யத் தவறி னால் அவைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமங்கள் ரத்து செய்யப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆற்காடு ஒன்றியத்தில் உப்புப்பேட்டையில் இருக்கிற டானரியை சென்னையிலே இருக்கிற ஒரு முதலாளியால் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகிறது. அதனாலே, தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் அன்னியச் செலாவணி அதிகமாகத் கிடைத்தா லும்கூட, அங்கேயிருக்கிற 3,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையை அரசு அறியுமா! அதைத் தவிர்க்க இப்பொழுது அவர்களுக்கு 6 மாதங்கள் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் அதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் அல்லது, கழிவுநீரை ஆவியாகப் போக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, உப்புப் பேட்டையிலே இரண்டு தோல் பதனிடும் அமைப்புகள் இருக்கின்றன. வெளியேற்றுகின்ற கழிவுநீர் கெட்ட பொருளைப்பாதி அளவு முடிப்பதும், மற்றொன்று முழு அளவு முடிப்பதும், ஆகவே, இந்த இரண்டு தோல் பதனிடும் ஆலைகளி லிருந்து வெளிவரும் கழிவுச் சாராய வடி நீரை ஆவியாக் அங்கே டாங்குகள் அமைக்க வெண்டுமென்று நாம் கேட்டிருக்

1982 மார்ச் 11]

தோம். அம்மாதிரி இருந்தும்கூட கழிவுநீர் பக்கத்திலே இருக்கக் கூடிய நிலங்களுக்குப் போய் அதன் மூலமாக, அங்கே உள்ள பயிர்கள் நாசப்படுகின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால்தான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனாலும் அவர்கள் 30—6—1982 வரையிலும் அவகாசம் கேட்டிருக்கி றார்கள். ஆகவே, 30—6—1982-க்குள் அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றால், அவர்களுடைய உரிமங்கள் ரத்து செய்யப்படும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே இது போன்ற பல தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதே போல், 7 நகராட்சி மன்றங்களுக்கும் நீர் தருவது பாலாறு. அந்தத் தொழிற்சாலை கள் பூராவும் ஆற்றங்கரையில் இருப்பதனால், அந்தக் கழிவு நீர் நேராக ஆற்றுக்குச் செல்வதால், குடிதண்ணீர் பாதிக்கக்கூடிய நிலை இருக்கிறது; ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாதிக்கக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, ஜூன் மாதம் 30 ஆம் தேதிக் குள் அவர்கள் கட்டி முடிக்க, தீவிர நடவடிக்கை எடுக்க அரசாங் கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, பாலாற்றிலே இது போன்ற கழிவுநீர் விழுவதன் மூலமாக, வெள்ளக் காலங்களில் பாலாற்றிலே வருகின்ற தண்ணீ ரோடு கழிவுநீர் கலக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அவைகளை யெல்லாம் கவனத்திலே கொண்டு, அந்தத் தோல் பதனிடும் ஆலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீரை எந்த அளவு அகற்றமுடியுமோ, அப்புறப்படுத்த முடியுமோ, பொது மக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படுத்தாத வண்ணம் தவிர்க்க முடியுமோ, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலையிலேயிருந்து வெளியேருகிற கழிவு நீரை அப்புறப்படுத்த, அல்லது சுத்தப் படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்திரவிட்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனாலும் இது ஒரு நீண்ட பிரச்னையாக இருந்து திண்டுக்கல் வட்டாரம், திருச்சி வட்டாரம், ஈரோடு வட்டாரம், வட ஆற்காடு மாவட்டத்திலே பெரும் பகுதி, இவ்வாறு பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் நிலங்களை அது பாதித்துக் கொண்டிருக்கிறது. சமீபத்திலேகூட சில மாதங்களுக்கு முன்னாலே, மேட்டூரிலே சுற்றியிருக்கிற விவ சாயிகளுடைய பயிர்கள் பாதிக்கப்பட்டதாலே, ஓரளவு நஷ்ட ஈடு வாங்கிக் கொடுத்திருக்கிறோம். எனக்குத் தெரிந்தவரை, ஏக்கருக்கு ரூ. 1,000 சமீபத்திலே பெற்றுக் கொடுத்திருக்கிறோம். அது போல், இதை அப்புறப்படுத்துகிற காரியத்தை நிறைவேற்று கிறபொழுது, மிகப்பெரிய அளவு பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய

விவசாயிகளுக்கு, வருமானம் வரக்கூடிய அந்தத் தொழிற்சாலையிலேயிருந்து ஓரளவுக்காவது நஷ்டஈடு கொடுக்க அரசு ஏதாவது பேச்சு வார்த்தை நடத்த முயற்சி எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் நீங்கள் சொன்ன யோசனையை வேண்டுமானால் அரசினுடைய பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஏ.எம். சேதுராமன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த டானரி தொழில் அதிகமான அளவுக்கு முதலிலே இராணிப் பேட்டையிலும், அடுத்த படியாக வாணியம்பாடி பகுதியிலும் இந்தக் கழிவு நீர் அதிகமாக பாலாற்றில் விட்டுவிடுகிறார்கள். அதன் காரணமாக இராணிப்பேட்டையிலே உள்ள மக்கள் ஆற்காட்டுக்கே குடி வந்துவிடலாமா என்று அச்சப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இதை உடனடியாகக் கவனித்து இந்தக் கழிவு நீர் பாலாற்றிலே கலப்பதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, அதையும் அரசு உடனடியாகப் பரிசீலிக்கும்.

கிராமங்களில் சாண எறிவாயு உற்பத்தி செய்யும் திட்டம்

*வினா எண் 470—திரு. த. புருஷோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பெரிய அளவில் மாட்டுச்சாண எரிவாயு உற்பத்தி செய்வதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 35,000 சாண எரிவாயு அமைப்புக்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் நடப்பு ஆண்டில் 3,500 அமைப்புகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.